# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, யூலை மாதம் 19 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 286 ஆம் சட்டமூலம் ]**


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2** : *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதுமாகும்.*

**வாசகம் 3** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் நீதிவான் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்படக் கூடியவாறான அதிகபட்ச குற்றப்பணத்தை அதிகரிப்பதற்குமாகும்.*

**வாசகம் 4** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 291 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளிலும் (3) ஆம் உட்பிரிவிலும் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை அதிகரிப்பதற்குமாகும்.*

**வாசகம் 5** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 388 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் அவமதிப்பு விடயங்களில் விதிக்கப்படும் குற்றப்பணங்களை அதிகரிப்பதற்குமாகும்.*

**வாசகம் 6** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துகின்றதுடன் அத்திருத்தத்தின் சட்டப்பயன் அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் கீழான தவறுகள் தொடர்பில் தண்டங்களை அதிகரிப்பதற்குமாகும்.*

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

ச.வ.ஓ. 18/2021

### 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர், ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில் -

(அ) உட்பந்தி (i) இல், "ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) உட்பந்தி (ii) இல், "ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "ஆயிரத்தைந்நூறு ரூபாவிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக" "ஒரு மில்லியன் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியில், "ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 291 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 291 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) ஓராம் உட்பிரிவில் -

(அ) அதன் (இ) என்னும் பந்தியில், "பத்து ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூவாயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஊ) என்னும் பந்தியில், (i), (ii), (iii) மற்றும் (iv) ஆகிய உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(i) குற்றப்பணத்தொகை மூவாயிரம் ரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் பத்தாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து ஏழு நாட் காலத்துக்கு;

(ii) குற்றப்பணத்தொகை பத்தாயிரம் ரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் இருபதாயிரம் ரூபாவுக்கு அதிகமானதாக இருக்குமிடத்து பதினான்கு நாட்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்துக்கு;

(iii) குற்றப்பணத்தொகை இருபதாயிரம் ரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து, மூன்று மாதங்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்துக்கு;

(iv) குற்றப்பணத்தொகை ஐம்பதாயிரம் ரூபாவுக்கு அதிகமானதாக இருக்குமிடத்து ஆறு மாதங்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்துக்கு;";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில் "இருநூற்றைம்பது ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 388 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 388 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் "மாவட்ட நீதிமன்றமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் கொடுப்பனவிலான தவறுகையின்போது அத்தகைய குற்றப்பணம் விரைவாக செலுத்தப்பட்டாலொழிய ஆறு மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய சாதாரண மறியற்றண்டனைக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை அதன் ஏழாம் (7) நிரலில், இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக இதற்கான அட்டவணையின் நிரல் III இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம், இதற்கான அட்டவணையின் நிரல் I இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தவறுகள் தொடர்பில் தண்டங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** [பிரிவு 6]

| நிரல் I | | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| தண்டனைச் சட்டக்கோவையின் கீழான பிரிவும் தவறும் | | நீக்கப்பட்ட சொற்கள் | பதிலீடு செய்யப்பட்ட சொற்கள் |
| 137 | தரைப்படை வீரர், மாலுமி அல்லது வான்படை வீரர் பயன்படுத்தும் உடையைத் தாம் அத்தகைய தரைப்படை வீரர், மாலுமி அல்லது வான்படை வீரர் என நம்பப்படலாம் என்ற உளக்கருத்துடன் அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தைக் கொண்டு செல்லுதல் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 151 | கலகம் முதலியன பற்றிக் காணிச் சொந்தக்காரர் அல்லது இருப் பாட்சியாளர் தகவல் தராமை | ஆயிரம் ரூபா | பத்தாயிரம் ரூபா |
| 157 | பொதுவிடச் சண்டை புரிதல் | நூறு ரூபாக் | பத்தாயிரம் ரூபாக் |
| 165 | அஞ்சல் அல்லது தொலைத் தொடர்புத் திணைக்களப் பகிரங்க சேவையாளரின் தீய ஒழுக்கம் | ஐம்பது ரூபா வரை | இருபதாயிரம் ரூபா வரை |
| 169 | மோசடியான உளக்கருத்துடன் பகிரங்க சேவையாளரால் பயன் படுத்தப்படும் உடையை அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தைக் கொண்டு செல்லுதல் | நூறு ரூபாக் | இருபத்தை யாயிரம் ரூபாக் |
| 169உ | தேர்தல் ஒன்று தொடர்பிலான இலஞ்சம் | ஐந்நூறு ரூபா | ஒரு மில்லியன் ரூபா |
| | விருந்தளித்தல் மூலமான இலஞ்ச மானால் | இரு நூறு ரூபாக் | ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாக் |
| 169 ஊ | தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்கு | ஐந்நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| | தேர்தல் ஒன்றில் ஆள்மாறாட்டம் செய்தல் | முந்நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| 169 எ | தேர்தல் ஒன்று தொடர்பில் பொய்யான கூற்று | முந்நூறு ரூபாக் குற்றப்பணம் | குற்றப்பணம் |
| 169 ஏ | தேர்தல் கணக்குகளை வைத்தி ருக்கத் தவறுதல் | முந்நூறு ரூபாக் குற்றப் பணம் | ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் |
| 170 | பகிரங்க சேவையாளரின் அழைப்புக் கட்டளை அல்லது வேறு கட்டளை சேர்ப்பிக்கப்படாது தவிர்ப்பதற் கெனத் தலைமறைவாக இருத்தல் | ஐம்பது ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| | அழைப்புக் கட்டளை அல்லது அறிவித்தல், நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கான தாயின் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 171 | ஏதேனும் அழைப்புக்கட்டளை அல்லது அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுதலை அல்லது ஒட்டப்படுதலைத் தடுத்தல் அல்லது அது ஒட்டப்பட்டிருக்கும் போது அகற்றுதல் அல்லது பிரகடனம் செய்யப்படுதலைத் தடுத்தல் | ஒரு மாதத் திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப்பணம் |
| | அழைப்புக்கட்டளை முதலியன நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற் கானதாயின் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 172 | குறித்த ஓர் இடத்தில், நேரிலோ அல்லது முகவர் மூலமோ சமுகமாயிருக்கும்படியான சட்ட முறையான கட்டளைக்குப் பணியாமை அல்லது அதிகார மில்லாமல் அங்கிருந்து அகன்று செல்லல் | ஒரு மாதத் திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் |
| | அக்கட்டளை சட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கான தாயின் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| 173 | பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு ஆவணம் ஒன்றினைக் காண்பிப்ப தற்கு அல்லது சேர்ப்பிப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவர் அதனை வேண்டுமென்று காண்பிக்கத் தவறுதல் | ஒரு மாதத் திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் |
| | ஆவணமானது நீதிமன்றமொன்றின் முன்னர் காண்பிக்கப்படவேண்டிய தொன்றாயின் அல்லது ஒப்படைக்கப் பட வேண்டியதொன்றாயின் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 174 | பகிரங்க சேவையாளருக்கு அறி வித்தல் அல்லது தகவல் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆளொருவர் அதனை அச்சேவை யாளருக்கு வேண்டுமென்று கொடுக்காது விடல் | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் |
| | தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் அல்லது தகவல் தவறொன்று புரியப்படுதல் தொடர்பிலான தாயின் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 175 | பகிரங்க சேவையாளருக்கு அறிந்து கொண்டு தவறான தகவலைத் தருதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |

| | | | |
|---|---|---|---|
| *176* | பகிரங்க சேவையாளரொருவரால், சத்தியஞ் செய்துகொள்ள முறைப்படி தேவைப்படுத்தப்படுமிடத்து சத்தியஞ் செய்ய மறுத்தல் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| *177* | சட்டப்படி உண்மை சொல்லக் கட்டுப்பட்டவர், விடையளிக்க மறுத்தல் | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |
| *178* | சட்டப்படி கையொப்பமிடுமாறு தேவைப்படுத்தப்பட்டவர், பகிரங்க சேவையாளருக்குச் செய்யப்பட்ட கூற்றொன்றினைக் கையொப்பமிட மறுத்தல் | நூறு ரூபாக் | இருபதாயிரம் ரூபாக் |
| *180* | எவரேனுமாளுக்கு ஊறு விளை விக்கும் அல்லது தொந்தரவு தரும் வகையில் பகிரங்க சேவை யாளரை அவரின் சட்டமுறைத் தத்துவத்தைப் பயன்படுத்தச் செய்யும் உளக்கருத்துடன் பொய்த் தகவல் கொடுத்தல் | ஆயிரம் ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| *181* | பகிரங்க சேவையாளரொருவரின் சட்டமுறையான அதிகாரத்தின் மீது ஆதனமெடுக்கப்படுதலை எதிர்த்தல் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| *182* | பகிரங்க சேவையாளரொரு வரின் அதிகாரத்தின் மீது விற்க முனையப்படும் ஆதனத்தின் விற்பனையைத் தடைசெய்தல் | ஒரு மாதத்திற்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் |

| | | | |
|---|---|---|---|
| 183 | பகிரங்க சேவையாளர் அவரது பகிரங்கப் பணிகளை நிறைவேற்று வதில் தடைசெய்தல் | மூன்று மாதங்களுக்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியல் அல்லது இருபத்தை யாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் |
| 184 | பகிரங்க சேவையாளருக்கு உதவியளிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளபொழுது உதவி யளிக்காது விடல் | ஒரு மாதத்திற் கான சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் | மூன்று மாதங் களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் |
| | மன்றாணையை நிறைவேற்றுதல், தவறுகள் முதலியவற்றைத் தடுத்தல் முதலியவற்றில் உதவி கோருபவரான பகிரங்க சேவை யாளர் ஒருவருக்கு உதவிசெய் யாது வேண்டுமென்று கவனயீன மாக இருத்தல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| 185 | பகிரங்க சேவையாளரொருவரால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியாமை, அத்தகைய கீழ்ப்படியாமை சட்டப்படி தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரே னும் ஆட்களுக்குத் தடை, மனக் குலைவு அல்லது ஊறு ஏற்படுத்து வதாயின் | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் | மூன்று மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் |
| | அத்தகைய கீழ்ப்படியாமை மனிதவுயிருக்கு, உடனலத்திற்கு அல்லது பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படுத்தினால் | ஆறு மாதத்திற்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத் திற்கான சாதாரண மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் |
| 219 அ | குடியியல் மன்றாணையின் கீழ்ச் சட்டமுறையாகக் கைது செய்யப் படுதலை எதிர்த்தல் அல்லது தடை செய்தல் | நூறு ரூபாக் | இருபதாயிரம் ரூபாக் |
| 223 | நீதிமுறை நடவடிக்கையின் எக் கட்டத்திலேனும் அமர்ந்துள்ள பகிரங்க சேவையாளரை வேண்டு மென்று நிபந்தனை செய்தல் அல்லது இடையீடு செய்தல் | ஆயிரம் ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 265 | விற்கக் கருதப்பட்டுள்ள உணவை அல்லது பானத்தைக் கேடு உண் டாக்கும் உணவாகக் கலந்து கொடுத்தல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| 266 | கேடு உண்டாக்கும் என அறிந்து கொண்டு ஏதேனும் உணவை அல்லது பானத்தை உணவாகவும் பானமாகவும் விற்றல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய காலததிற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 267 | விற்பனைக்குள்ள ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அதன் ஆற்றல் குறையும் வண்ணம் அல்லது அதன் செயற்பாட்டை மாற்றும் அல்லது கெடுதியான தாக்கும் வண்ணம் கலந்திளக்கமாக்குதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய காலததிற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 268 | ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அது கலந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொண்டு, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல் அல்லது மருந்துச் சாலையிலிருந்து வழங்குதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய காலததிற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |

| | | | |
|---|---|---|---|
| 269 | ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை வேறொரு மருந்துப் பொருளாக அல்லது தயாரிப்பாக விற்றல் அல்லது மருந்துச் சாலையிலிருந்து வழங்குதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகை யிலொருவகை மறியல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 270 | பொது நீருற்றின் அல்லது நீர்த்தேக் கத்தின் நீரை அசுத்தப்படுத்தல் | மூன்று மாதங்களுக்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 271 | வளிமண்டலத்தை உடனலத்துக்குக் கேடு உண்டாக்குவதாக்கல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| 272 | உயிர் வாழ்வுக்கு ஆபத்தான வகை யில் பகிரங்க வழி ஒன்றில் அசட்டுத் துணிவாக அல்லது கவனயீனமாக வாகனம் ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல் முதலியன | ஆறு மாதங்களுக்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும் | இருபத்தை யாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப் பணம் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | இரண்டாவது குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன் மீது முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எழுபத்தை யாயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப் பணமும் அவரது சாரதி உரிமம் இடைநிறுத்துப் படுதலும் அத்துடன் மூன்றாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப் பளிக்கப் படுவதன்மீது எழுபத்தை யாயிரம் ரூபாவுக்கு குறையாத குற்றப்பணம் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி யொன்றிற் கான கடூழிய மறியல் அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற் றண்டனை |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகிய இரண்டும் அவரது உரிமம் இல்லா தாக்கப் படுதலும் |
| 273 | மனித உயிருக்கு ஆபத்து ஏற் படுத்தும் வகையில் கலம் ஒன்றை அசட்டுத் துணிவாக அல்லது கவன யீனமாகச் செலுத்துதல் முதலியன | அதே | ஆறு மாதங் களுக்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 275 | உயிர் வாழ்வுக்கு ஆபத்து ஏற் படுத்தக்கூடிய வகையில் அளவுக்கு மிஞ்சிப் பாரமேற்றப்பட்டுள்ள அல்லது பாதுகாப்பற்ற கலத்தில் நீர்மீது வாடகைக்கு ஆளை ஏற்றிச் செல்லல் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 276 | பகிரங்க வழி எதிலும் அல்லது கலத்தின் பாதையில் ஆபத்து அல்லது தடை அல்லது ஊறு ஏற்படுத்துதல் | நூறு ரூபாக் குற்றப் பணம் | ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் |
| 277 | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் நச்சுப் பதார்த் தத்தைக் கையாளுதல் | நூறு ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| 278 | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் தீயை அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருளைக் கையாளுதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |
| 279 | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் வெடிப் பொருளைக் கையாளுதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது எழுபத்தை யாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |
| 280 | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் இயந்திரத்தைக் கையாளுதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |

| | | | |
|---|---|---|---|
| 281 | ஏதேனும் கட்டடத்தை இடித்து வீழ்த்துவதில் அல்லது பழுது பார்த்தலில் உரிமையுள்ளவரான ஆள், அவ்வாறு வீழ்த்துவதினால் அல்லது பழுது பார்த்தலினால் மனித உயிருக்கு உண்டாகக்கூடிய ஆபத்திலிருந்து காப்பதற்குத் தவறுதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய காலத்திற் கான இருவகையி லொருவகை மறியல் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 282 | தமது உடைமையிலுள்ள ஏதேனும் விலங்கு தொடர்பில், அத்தகைய விலங்கினால் மனித உயிருக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து அல்லது கடும் காயத்திலிருந்து காப்பதற்கு ஒழுங்கு செய்யாது விடுதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய காலத்திற் கான இருவகையி லொருவகை மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப் பணம் அல்லது இரண்டும் |
| 283 | பொதுத் தொல்லை புரிதல் | ஐம்பது ரூபாக் | இருபதாயிரம் ரூபாக் |
| 314 | வேண்டுமென்று காயம் விளைத்தல் | ஆயிரம் ரூபா | ஐம்பதாயிரம் ரூபா |
| 325 | ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதாது பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டப்படுதலின்மீது, வேண்டுமென்று காயம் விளைத்தல் | ஐம்பது ரூபா | இருபதாயிரம் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| 326 | ஆத்திரமுட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதாது பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டப்படுதலின்மீது வேண்டுமென்று கடுங்காயம் விளைத்தல் | இரண்டாயிரம் ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 327 | மனித உயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய செயல் எதனையும் அசட்டையாக அல்லது கவனவீன மாகச் செய்தல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| 328 | மனித உயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக்கூடிய செயலொன்றினை அசட்டையாக அல்லது கவனயீனமாகச் செய்தலினால் காயம் விளைத்தல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| 329 | மனித உயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக்கூடிய செயலொன்றினை அசட்டையாக அல்லது கவனயீனமாகச் செய்தலினால் கடுங்காயம் விளைத்தல் | ஆயிரம் ரூபாக் | ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாக் |
| 332 | எவரேனுமாளை முறைகேடாகத் தடுத்து வைத்தல் | ஐம்பது ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 333 | எவரேனுமாளை முறைகேடாக அடைத்து வைத்தல் | ஆயிரம் ரூபாக் | ஐந்து இலட்சம் ரூபாக் |
| 343 | பாரதூரமான தாக்குதல் அல்லது ஆத்திரமூட்டப்பட்டதன் மீதன்றி குற்றமுறையாக வலோத்காரத்தைப் பிரயோகித்தல் | ஐம்பது ரூபாக் | ஐம்பதாயிரம் ரூபாக் |
| 348 | முறைகேடாக ஆளை அடைத்து வைக்க எத்தனிப்பதில் தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோத்காரம் புரிதல் | ஆயிரம் ரூபாக் | ஐந்து இலட்சம் ரூபாக் |
| 349 | பாரதூரமான திடீராத்திரமூட்டப் படுதலின் மீது தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோத்காரம் புரிதல் | ஐம்பது ரூபாக் | இருபதாயிரம் ரூபாக் |

| | | | |
|---|---|---|---|
| *433* | குற்றமுறையான அத்துமீறல் | நூறு ரூபாக் | ஒரு இலட்சம் ரூபாக் |
| *434* | வீடத்துமீறல் | ஆயிரம் ரூபாக் | ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாக் |
| *450* | சட்டவிரோதமான நோக்கங் களுக்காகக் கட்டடம் முதலிய வற்றில் காணப்படுதல் | ஐம்பது ரூபாக் | இருபதாயிரம் ரூபாக் |
| *451* | பெயர்பெற்ற திருடன் அலைந்து திரிதல் | அதே | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய காலத்திற்கான இருவகையி லொருவகை மறியல் அல்லது இருபதாயிரம் ரூபாவரை நீடிக்கக் கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |